# திருமலை


## (ஸ்ரீ க்ஷேத்திர அரஹந்தகிரி வரலாறு)





- நூல் வடிவம் -
R. விஜயன், M.A.,M.Ed.,M.Phil., முதுகலை ஆசிரியர்,
அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி, ஆரணி (தி.மா)

- வெளியீடு -
ஸ்ரீ நேமிநாதர் பதிப்பகம்,
ஸ்ரீ க்ஷேத்திர அரஹந்தகிரி திகம்பர ஜைன மடம்,
திருமலை, திருவண்ணாமலை மாவட்டம்.



# திருமலை

(ஸ்ரீ க்ஷேத்திர அரஹந்தகிரி வரலாறு)

தமிழகத்திலேயே திருவண்ணாமலை மாவட்டத்தில் தான் ஜைன ஆலயங்கள் அதிகமாக அமைந்துள்ளன என்பது நமக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாகும்.

கிருத்து பிறப்பதற்கு முன்பே தமிழகத்தில் ஜைன சமயம் இடம் பெற்றுவிட்டதற்கான வரலாற்று ஆதாரங்கள் பல உண்டு. திருவண்ணாமலை மாவட்டத்தின் வடகிழக்கு எல்லையில் அமைந்த மாமண்டூர் கல்வெட்டே இம்மாவட்ட சமண வரலாற்றின் தொடக்கநிலை அடையாளமாகும்.

சமணப் பெருந்துறவி ஸ்ரீ பத்திரபாகு அவர்களோடு பல்லாயிரக்கணக்கான துறவியரும் தென்னகம் நோக்கி வந்து கர்னாடக மாநிலத்தில் சிரவண பௌகோளாவில் வந்து தங்கினர். அத்தகைய காலகட்டத்தில்தான் பல துறவியர் தமிழகத்தை நோக்கி வந்தனர். அதில் ஒரு பிரிவினர் மதுரையை நோக்கியும், இன்னொரு பிரிவினர் காஞ்சிபுரம் நோக்கியும் வந்தனர். பிற்காலத்தில் காஞ்சிபுரம் வந்த துறவியர் (வந்தவாசி) பொன்னூர் மற்றும் திருமலையில் தங்கி சமணத்தை வளர்க்க தலைப்பட்டனர்.

ஸ்ரீ அகளங்க ஆச்சாரியார் அவர்கள் பௌத்தர்களை வென்றதால் புகழ்பெற்ற கரந்தை, ஸ்ரீகுந்தகுந்தர் என அழைக்கப்படும் ஹேளாச்சாரியார் தங்கியிருந்து, பல அறநூல்களை எழுதிய இடமான பொன்னூர்மலை, பழங்காலத்தே துறவியர் கூடி சமண சங்கம் அமைத்து சமயத்தை வளர்க்கத் தலைப்பட்ட திறகோல் பெண் துறவியருக்கென பாழி அமைந்த வேடல், ஆண் துறவியரின்

பள்ளிகள் அமைந்த சீயமங்கலம், துறவியருக்கென படுக்கைகள் வெட்டப்பட்ட வழுதலங்குணம் மற்றும் சேதாரம்பட்டு என இம்மாவட்டம் முழுதும் சமணர்தம் அடையாளங்களை ஏற்படுத்தி வரலாற்றில் நிலைபெற்றனர்.

இவைகளுள் திருமலைக்கு மட்டும் என்றுமே தனியிடம் உண்டு. இங்கே இயற்கையாய் அமைந்த குகைப்பாழி, மன்னர்கள் உதவிப் பெற்ற ஆலயங்கள், குகைக் கோயில்கள், சுதை படைப்புகள், பாறை புடைப்புச் சிற்பங்கள், மலைக் கோயில், திருவடிகள், கல்வெட்டுகள் மற்றும் பழமையான ஓவியங்கள் என்று அனைத்து அம்சங்களின் சங்கமமாக விளங்கும் இடமே இந்த திருமலை ஆகும்.

பல்லவர், சோழர், ராஷ்டிரகூடர், மலையமான், பாணர், அதியமான், சம்புவராயர், பிற்கால பாண்டியர், விஜய நகர மன்னர்கள் மற்றும் நாயக்கர்கள் போன்றோர்களின் வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது இந்த திருமலை.

திருமலை என்றழைக்கப்படும் இம்மலையானது நீளவாக்கில், கிழக்கு – மேற்காக அமைந்து சித்தன்னவாசல் மலையைப் போன்று நீண்ட பாறைகளின் தொகுப்பாக விளங்குகின்றது. இந்த மலையின் தென்புறம் இயற்கையான குகைப் பகுதியும், நீர் சுனைகளும் உள்ளன. ஜைனத் துறவியர் பழங்காலத்தே இந்தப் பாழிகளைத் தேர்ந்தெடுத்தே தங்கியிருந்துள்ளனர்.

ஸ்ரீ பத்திரபாகு முனிவரோடு தென்னகம் வந்த பல்லாயிரக்கணக்கான துறவிகளின் ஒரு பிரிவினர் வட தமிழகத்திற்குள் வந்தபோது திருமலையிலும் பலர் தங்கியிருந்தற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. பாழிகளைப் பயன்படுத்தியதாலேயே அங்கு பிற வள்ளல்கள்

பிற்காலத்தே பள்ளிகளை (ஸ்ரீ கோயில்) அமைத்து தந்திருக்க வேண்டும்.

அழியபடைதாங்கி என்னும் ஊரில் பௌத்த துறவிகளை தமது வாதத்திறமையால் வென்ற ஸ்ரீ அகளங்க ஆச்சாரியார் ஜைன மதத்தை வளர்க்கத் தலைபட்ட போது திருமலைக்கும் வந்ததாக சமண செய்திகளின் மூலம் தெரியவருகிறது. அத்தகைய புகழ்பெற்ற திருமலை அன்று தொடங்கி இன்று வரை நிலைபெற்று நின்று சமணத்தை வளப்படுத்தி வருகிறது.

## திருமலையின் வரலாறு :

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், வடமாதிமங்கலம் என்ற ஊரின் தென்கிழக்கில் திருமலை அமைந்துள்ளது. இந்த கிராமத்தில் பண்டைய காலத்திலிருந்தே மக்கள் வாழ்ந்ததன் தடயங்கள் இருப்பதாக வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

இந்த கிராமத்தின் பெயர் அக்காலத்தில் வைகாவூர் என்றும் மலையை "திருமலை" என்றும் வழங்கி வந்துள்ளனர்.

கல்வெட்டுச் செய்திகளின்படி இவ்வூர், வைகாவூர் திருமலை, எண்குண இறை திருமலை, ஸ்ரீ சைலபுரம், அர்ஹசுகிரி என்றெல்லாம் குறிப்பிடப்பட்டிருந்தாலும் தற்போது திருமலை என்ற பெயரே இவ்வூருக்கு நிலைத்துவிட்டது.

வட தமிழகத்தில் புகழ்பெற்று விளங்கும் சிறந்த ஜைனத் தலங்களான திருப்பருத்திக்குன்றம், சித்தாமூர், திருநறுங்குன்றம், கரந்தை, வள்ளிமலை போன்று திருமலையும் நற்பேறுபெற்ற தலமாக விளங்குகின்றது.

# ஆலயங்கள்

திருமலை ஆலயங்கள் அனைத்தும் தொல்பொருள் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன என்றாலும் அனைத்து நாட்களிலும் வழிபாடு செய்யமுடியும்.

இந்த நூலின் மைய பக்கங்களில் கொடுத்துள்ள வரைபடமானது, இம்மலையின் அனைத்து இடங்களுக்குச் செல்லவும், ஆலயங்களை அடையாளம் கொள்ளவும் வசதியாக மிக எளிமையாகத் தரப்பட்டுள்ளது. அதன் வரிசைப்படி இங்கு அமைந்துள்ள இடங்களை இனிக் காண்போம்.

## பஞ்ச பரமேஷ்டி ஆலயம் :

மலையின் தென்கிழக்கில் அமைந்த பிரதான நுழைவு வாயிலை அடுத்து இடது புறமாக இடம்பெற்றிருப்பது (எண் : 4) பஞ்ச பரமேஷ்டி ஆலயம் ஆகும். இந்த பழமையான சிற்றாலயத்தின் கருவறையில் வட்டமான பலகை கல்லில் ஜைனர்கள் முதலில் வணக்கம் செய்யும் ஐவரையும் (பஞ்சபரமேஷ்டிகள்) ஒரு சேர செதுக்கப்பட்டு இடம் பெற்றுள்ளது.

இவ்வாலயத்தின் மேற்கில் உள்ளது மூன்றடிக்கிணறு. (எண். 5) மூன்றடி ஆழம் கொண்ட இக்கிணற்று நீரை அக்காலத்தில் இப்பகுதி மக்கள் பயன்படுத்தியுள்ளனர். தருமதேவி வரலாறில் காணும் அக்னிலாதேவி தம் குழந்தைகளின் தாகத்திற்கு இக்கிணற்று நீரைத்தான் கொடுத்தாராம்.

## ஸ்ரீ மகாவீரர் ஆலயம் :

பஞ்சபரமேஷ்டி ஆலயத்திற்கு அடுத்ததாக நாம் தரிசிக்கும் கோபுரம் (எண் : 7) ஸ்ரீ மகாவீரர் ஆலயத்திற்காக அமைக்கப்பட்டதாகும். இந்த கோபுரத்திற்கு ஒரு சிறப்பு உண்டு. இதன் உட்புறமாக நாம் நின்றால் கோடையிலும் கூட இளந்தென்றல் காற்று நம்மீது வீசும் அமைப்பை பெற்றுள்ளது.

மூன்று நிலைகளுடன் கூடிய இந்த கோபுரத்தைக் கடந்ததும் தூண்கள் தாங்கிடும் மண்டபத்துடன் கூடிய ஸ்ரீ மகாவீரர் ஆலயம் (எண் : 8) அழகுடன் நிற்பதைக் காணலாம்.




இந்த ஆலயம் கி.பி. 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கருவறை, உள்ளாலை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் மற்றும் முன்மண்டபம் ஆகிய கட்டுமானங்களைக் கொண்டது ஆகும். இவ்வாலய கருவறையின் மீது கட்டப்பட்டுள்ள விமானம் திரி தள (மூன்று தளங்களைக் கொண்ட) வகையைச் சேர்ந்தது. மூலவர் ஸ்ரீ மகாவீரர், சுதை எனப்படும் சுண்ணச்சாந்து கொண்டு அமைக்கப்பட்டு எழிலுற காட்சியளிக்கிறார்.

## குந்தவை ஜினாலயம் :

சோழப் பேரரசர் இராஜராஜ சோழனின் சகோதரி குந்தவை நாச்சியாரால் (இராஜேந்திர சோழனின் ஆட்சி காலத்தில்) கி.பி.11 ஆம் நூற்றாண்டில் இந்த ஆலயம் (எண்: 9) கட்டப்பட்டது. இன்றுவரை இவ்வாலயம் அவரது பெயராலேயே குந்தவை ஜினாலயம் என்றே அழைக்கப் படுகிறது.

இந்த ஆலயத்தின் மூலவர் ஸ்ரீ நேமிநாதர் ஆவார். இந்த ஆலயம் கருவறை, உள்ளாலை, அர்த்த மண்டபம் மற்றும் முன் மண்டபம் ஆகிய அமைப்புகளைக் கொண்டது.



சோழர் காலத்தில் மூலவராக நிறுவப்பட்ட (எண் : 10) ஸ்ரீ நேமிநாதரின் பெரிய சிற்பம், தொடைப் பகுதியில் சிதைவும், வலது தோள்பட்டை அருகே விரிசலும் ஏற்பட்டதால் அதனை முன்மண்டபத்தின் தெற்கில் வைத்து, கருவறையில் வேறு சிற்பம் வைத்துள்ளனர்.

சேதமுற்ற சிற்பத்தில்கூட ஒரு சிறப்பு அம்சம் உண்டு. அதில் ஸ்ரீ நேமிநாதரின் தலை அருகில் (அவர் மூங்கில் மரத்தடியில் ஞானம் பெற்றதை நினைவு படுத்தும் வகையில்) மூங்கில் கீற்றுகள் செதுக்கப்பட்டுள்ளன. இவ்வமைப்பை வேறு எங்கும் காண இயலாது.

## நினைவு பீடம் :

குந்தவை ஜினாலயத்தின் தென்புறமாக (எண் : 11) ஜைன சித்தாந்தவாதி வாதீப சிம்மர் என்பார் முக்தியடைந்ததன் நினைவாக சிறிய பீடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கத்ய சிந்தாமணி என்ற அறநூலைப் படைத்தவர் இவரே. இந்நூல் சீவக சிந்தாமணியின் முன்னோடியாய் எழுதப்பட்ட சமஸ்கிருத நூலாகும்.

## குகைப்பகுதி

குந்தவை ஜினாலயத்திற்கு வடக்கில் மலைப் பாறையினை ஒட்டி சிற்றாலயங்கள் கட்டப்பட்டுள்ளன. மேற்கிலிருந்து கிழக்காக பார்ப்போமேயானால்,

முதலாவது சிற்றாலயம் செங்குத்தான படிகளைக் கொண்டு சற்று உயரத்தில் கட்டப்பட்டுள்ளது (எண். 13). அதன் உள்ளே பாறையில் நான்கு புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகிறன. இவை கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இதில்,



1. கற்பக மரத்தை கையில் பிடித்தபடி தருமதேவி (இவர் ஸ்ரீ நேமிநாதரின் இயக்கி ஆவார்)
2. இரு சகோதரிகளுடன் ஸ்ரீ பாகுபலி.
3. அமர்ந்த நிலையில் பகவான் ஸ்ரீ நேமிநாதர்
4. ஸ்ரீ பார்சுவநாதர்



ஆகியோரது திருமேனிகள் வரிசையாக அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆலய நுழைவு வாயில் மிகக்குறுகலானது.

எனவே கவனமுடன் செல்ல வேண்டும்.

இச்சிற்றாலயத்திற்கு கிழக்காக தரைப்பகுதியில் நான்கு அறைகள், வரிசையாக கட்டப்பட்டுள்ளன. இதன் (எண் : 14) முதலாவது அறை தற்போது காலியாக இருக்கிறது.

இரண்டாவது அறையில் (எண். 15) பகவான் ஸ்ரீ ஆதிநாதரின் கற்சிலை இடம் பெற்றுள்ளது.

மூன்றாவது அறையில் (எண் : 16) ஸ்ரீ வர்த்தாமனரின் அமர்ந்தகோல கற்படிமத்தைக் காணலாம்.

நான்காவது அறையில் (எண். 17 ) பகவான் ஸ்ரீ ரிஷிபநாதரின் கல்திருமேனி இடம் பெற்றுள்ளது.

ஐந்தாவதாக அமைந்துள்ள பகுதி (எண். 18) மேலே உள்ள குகைப்பள்ளிக்குச் செல்லும் வழியாகும். இந்த குறுகிய படிகளின் வழியே மேலேறி சென்றால் குகையை அடையலாம்.

இந்த வாயிலுக்கு அடுத்து கிழக்கில் தூண்கள் நிறைந்த மண்டபம் (எண். 19) ஒன்று காணலாம். இதற்கு "பதினாறுகால் மண்டபம்" என்பது பெயராகும். தற்போது இது காலியாக இருந்தாலும், முற்காலத்தில் இங்கு பெரிய விழாக்கள் நடந்தேறியதாலேயே இது போன்ற மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை இம்மண்டபம் உணர்த்துகிறது.

## மேலே உள்ள குகைப் பள்ளி :

மண்டபத்தின் மேற்கு புறத்தில் உள்ள (எண். 20) வழியாக மேலே சென்றால் அழகிய குகைப் பள்ளியை அடையலாம்.

இந்த குகைப் பகுதியில் முற்காலத்தில் ஜைன துறவியர் வந்து தங்கியிருந்து தியானம், தவம் இவைகளில் ஈடுபட்டனர். மேலும் ஆகமம் ஓதுதல், ஸ்வாத்யாயம் செய்தல், கல்வி கற்பித்தல் போன்ற புண்ணிய செயல்களைப் புரிந்துள்ளனர்.

ஸ்ரீ அகளங்க ஆச்சாரியார் இப்பகுதிக்கு வந்து சில காலம் இங்கே தங்கியிருந்ததாக கூறப்படுகிறது. இப்பாழி தவிர, இதன் கிழக்கில் தனியே இரு இயற்கைக் குகைகளும் உண்டு.

எனினும் தற்போது கூறப்படும் குகைப் பள்ளி பல ஓவியங்களையும், அறைபோன்ற தடுப்புச் சுவர்களையும்,

சுதை உருவங்களையும், நீர்ச்சுனையையும் கொண்டுள்ளது. சுமார் 70 அடி நீளமும், 15 அகலமும், 10 அடி உயரமும் கொண்டதாக இக்குகை விளங்குகிறது.


இக்குகைக் கோயில் மேல் தளப்பகுதியில் காணப்படும் சிவப்பு நிற வண்ணப்பூச்சு கி.பி. 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். மேலும் பக்கச் சுவர்களிலும், உள் அறைகளின் தளப்பகுதிகளிலும் காணும் வண்ண ஓவியங்கள் அனைத்தும் கி.பி.14ம் நூற்றாண்டினைச் சேர்ந்தவை ஆகும்.



இக்குகையின் உள்ளே நாம் நுழையும்போதே துவார பாலகர்களின் ஓவியத்தை முதலில் காணலாம். உள் அறையில் மேற்கு பார்த்த சுவர் ஓவியத்தில் ஸ்ரீ ஆதிநாதரின் அழகிய உருவம் காணலாம். இதில் நெற்றிக் கண்ணுடன் பகவான் காட்சித் தருகிறார். இவைதவிர, சமவசரணம், தேவர்கள், துறவிகள், விலங்குகள், நீர் நிலைகள், பூக்கள் என திரும்பிய திசையெங்கும் வண்ண ஓவியங்கள் மனதை கவர்கின்றன.

**சுதை உருவம் :**


குகைக்கோயிலின் வெளிப்புற சுவரில் மேற்குதிசையைப் பார்த்தபடி (எண். 12) ஸ்ரீ பார்சுவநாதரின் சுதை வடிவம் காணப்படுகிறது. தலைக்குமேலாக நாகமும், பாதங்கள் அருகே யானைகளும் இதில் இடம் பெற்றுள்ளன. இந்த அழகிய சுதை வடிவம் கி.பி. 10ஆம் நூற்றாண்டை சேர்ந்தது.


திருமலையின் முக்கிய இடங்கள்
1. திருமலை ஜைன மடம்
2. பஞ்சகுல தேவதைகள் ஆலயம்
3. வழி
4. பஞ்ச பரமேஷ்டி ஆலயம்
5. மூன்றடி கிணறு
6. கல்வெட்டுகள்
7. கோபுரம்
8. ஸ்ரீ மகாவீரர் ஆலயம்
9. குந்தவை ஜினாலயம்
10. ஸ்ரீ நேமிநாதர் சிலை
11. வாதீபசிம்மர் நினைவு பீடம்
12. ஸ்ரீ பார்சுவநாதர் சுதை சிலை
13. பாறை சிற்ப ஆலயம்
14. காலியான அறை
15. ஸ்ரீ ஆதிநாதர் சிலை
16. ஸ்ரீ வர்த்தமானர் சிலை
17. ஸ்ரீ ரிஷபநாதர் சிலை
18. குகைக்கு செல்லும் வழி
19. பதினாறு கால் மண்டபம்
20. குகைப் பள்ளி & ஓவியம்
21. இயற்கை குகை
22. மருந்து அரைக்கும் குழி
23. தருமதேவி சுனை
24. இராஜராஜ சோழன் சிலை
25. ஸ்ரீ சிகாமணிநாதர் சிற்பம்
26. ஸ்ரீ பார்சுவநாதர் ஆலயம்
27. திருவடிகள்
N

## இரு இயற்கை குகைகள் :

மகாவீரர் கருவறைக்கு வடக்காக, குகைக்கோயிலுக்கு கிழக்காக (எண். 21) மிகக்குறைந்த உயரத்தில் இரண்டு இயற்கை குகைகள் உண்டு. இரண்டிலும் நீர் சுனைகள் இடம் பெற்றுள்ளன. இந்த இடத்திற்கு செல்வதற்கு வழியாக அமைந்த பாறையில் இரு இடங்களில் மும்மூன்று படிகள் உள்ளன. இவை குந்தவை ஜினாலாயம் கட்டப்பட்டதற்கு முன்பே செதுக்கப்பட்டிருக்க வேண்டும்.

இங்குள்ள மேற்கு குகையின் தரைப்பகுதியில் இரு இடங்களில் துறவியர் படுப்பதற்காக சமதளம் அமைக்க பாறையானது தட்டப்பட்டுள்ளது. அதன் அருகே 23 செ.மீ. விட்டமுள்ள மருந்து அரைக்கும் (எண். 22) குழி ஒன்றும், அதற்கு கிழக்காக மழைநீர் வடிய கால்வாய் 1/2 அடி அகலமும், 65 அடி நீளமும் உள்ளதாக வெட்டப்பட்டுள்ளது.



ஒரு பாறை கல்வெட்டு

## மலைமீது அமைந்தவை :

மலையின் தென்பகுதியில் அமைந்த ஆலயங்களை இதுவரையில் தரிசித்தோம். இனி மலைமீது அமைந்த அற்புதங்களை காணச் செல்வோம். அவ்வாறு செல்லுகையில் நுழைவு வாயில் (எண். 3) வழியே மீண்டும் வெளியே வந்து, சாலை வழியே மேற்கில் நடந்து வரவேண்டும். வழியில் மலையை அடுத்து வலப்புறமாக சமீபத்தில் கட்டப்பட்ட சிறு மண்டபத்தில், அங்கே வெகுநாளாய் தனித்துவிடப்பட்டிருந்த இராஜராஜ சோழன் சிலையைக் (எண். 24) காணலாம்.

மேற்கில் மேலும் நடந்து சாலையை விட்டு வலப்புறமாக திரும்பினால், மலையின் மேற்கு முனையை அடையலாம். அங்குள்ள படிகளின் வழியே மேலே செல்லவேண்டும்.

## ஸ்ரீ சிகாமணிநாதர் சிற்பம் :



மலையின் இடைப்பகுதியில் ஏறிச் செல்லும்போது முதலாவதாக (எண். 25) நாம் காண்பது ஸ்ரீ சிகாமணிநாதர் சிற்பமாகும். செங்குத்தான பாறையில் இச்சிற்பம் புடைப்பு சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது. நின்ற நிலையிலான இந்த சிலையின் உயரம் 17 1/2 அடியாகும்.

பகவான் ஸ்ரீ நேமிநாதரின் சிறப்புப் பெயரே 'சிகாமணிநாதர்' என்பதாகும். கி.பி. 11 அல்லது 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்த சிற்பம், இந்தியாவிலேயே அதிக உயரமுள்ள நேமிநாதரின் சிற்பம் என்ற சிறப்பைப் பெற்றது.

## ஸ்ரீ பார்சுவநாதர் ஆலயம் :

சிகாமணிநாதர் சிற்பமும் அதனை மையப்படுத்தி கட்டப்பட்ட இந்த ஆலயத்தைக் கடந்து மேலும் கிழக்குப் பக்கமாக சென்றால் (எண். 26) ஸ்ரீ பார்சுவநாதருக்காக எழுப்பப்பட்ட தனி ஆலயத்தைக் காணலாம்.



நின்ற கோலத்தில் காட்சி தரும் இந்த பகவானின் சிற்பம் கி.பி. 16ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இச்சிற்றாலயம் சேரர் மரபைச் சார்ந்த சிற்றரசரால் கட்டப்பட்டதாக கல்வெட்டுகள் கூறுகின்றன.

## திருவடிகள் :

ஸ்ரீ பார்சுவநாதரை தரிசித்தபின் மலையின் உச்சிக்கு சென்றால் அங்கே மூன்று இடங்களில் (எண். 27) மூன்று சமணப் பெரியோர்களின் நினைவாக பாதச்சுவடு அடையாளங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவை சரணச் சின்னங்கள் என்றும் அழைக்கப்படும்.



ரிஷப சேன கணதரர்
சமந்த பத்திர முனிவர்
வரதத்தாசாரியார்

ஆகிய சமணச் சான்றோர்கள் இங்கு தங்கியிருந்ததன் நினைவாக இவைகள் செதுக்கப்பட்டுள்ளன.

இந்த பாதச்சுவடுகளுக்கு மேற்கில், பாறை இடுக்கில் வளர்ந்துள்ள மரத்தின் பெயர் 'தேவ அலரி மரம்' என்பதாகும். இம்மரத்தின் பூக்கள் இத்திருவடிகளின் மீது இயற்கையாய்

உதிர்ந்து கிடப்பது காணக் கண்கொள்ளா காட்சியாகும்.

**உங்கள் கவனத்திற்கு :**

இந்த ஆலயங்களை தரிசிக்க எல்லா நாட்களிலும் பலர் வந்து செல்வர் என்றாலும் ஞாயிற்றுக்கிழமைகளில் மக்கள் அதிகமாக வருகின்றனர். வெளியூர்களிலிருந்தும் வெளி மாநிலங்களிலிருந்தும் மற்றும் வெளி நாடுகளிலிருந்தும் பலர் வருகை புரிவர். தாங்கள் வரும்போது ஜினாலயங்கள் பூட்டப்பட்டிருந்தால், ஆலய உபாத்யாயரை அணுகவும், அவர் உங்களுக்கு உதவி செய்வார்.

**திருமலை ஜைன மடம் :**

மலைக்கு வரும்போதே திருமலை கிராமத்திற்கு முன்பாக (எண் : 1) ஜைன மடம் உள்ளது. ஸ்ரீ க்ஷேத்ர அரஹந்த கிரி திகம்பர ஜைன மடம் என்பதே இம்மடத்தின் முழுப் பெயராகும். மிக அமைதியான சூழலில் இந்த மடம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஜைன மடத்தின் மடாதிபதியாக விளங்குபவர், ஸ்வஸ்தி ஸ்ரீ தவளகீர்த்தி பட்டாரக சுவாமிஜி அவர்களாவர். இவர் விழுப்புரம் மாவட்டம், உப்பு வேலூரைச் சேர்ந்த வி.ஏ. பார்சுவ நைனாரின் புதல்வராவார். இவரது இயற்பெயர் ஸ்ரீ தரணேந்திர சாஸ்திரி என்பதாகும்.

சுவாமிஜி அவர்கள் தமது தொடக்க நிலைக் கல்வியை சிரவண பெளிகுளம், ஸ்ரீ கோமடேஸ்வரர் வித்யா பீடத்தில், பிரம்மசர்ய ஆசிரமத்தில் பயின்றார்.

மத்திய பிரதேசம், ஜபல்பூரிலுள்ள அஸ்தினாபுரம் மற்றும் பனாரஸ், ஸ்யாத்வாத மகாவித்யாலயத்தில்

மேற்கல்வி பயின்று சமஸ்கிருதத்தில் ஜைன தரிசன ஆசார்ய என்ற தேர்வில் தங்கப்பதக்கத்தை வென்று, அப்போதைய துணைக் குடியரசு தலைவர் திரு. கே.ஆர். நாராயணன் அவர்களிடம் தங்கப் பதக்கத்தை பெற்றவர்.

இவை தவிர இந்தி மொழியில் எம்.ஏ., ஜோதிடம், வாஸ்து மற்றும் பிரதிஷ்டா விதிமுறைகளையும் கற்று பஞ்சகல்யாண ஆராதனை விதிவிதானங்கள் வாயிலாக நிறைந்த அனுபவம் பெற்றவர்.



சிரவண பெளிகுள மடாதிபதியான, ஸ்ரீ சாருகீர்த்தி பட்டாரக பட்டாசார்ய மகாசுவாமிஜி அவர்களால் 8.2.1998 அன்று முதல் திருமலை மடாதிபதியாக ஆசீர்வதிக்கப்பட்டு ஜின தர்மங்களை செய்துவருகிறார்.

## ஜைனமடத்தின் தொண்டுகள் :

திருமலை ஜைன மடாதிபதி, சுவாமிஜி அவர்கள் ஆரம்பம் முதலே தொண்டு செய்வதையே உயரிய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறார். இவரது பணிகள் அளப்பறியன.

இப்பகுதியில் உள்ள ஜினாலயங்களை புதுப்பித்து ஜினதர்மத்தை நிலைநாட்ட தம்மால் இயன்ற வரை சேவை செய்துவருகிறார்.

இந்த மடத்தின் முக்கிய அங்கமாக செயல்பட்டு வரும் ஆசார்ய ஸ்ரீ அகளங்க வித்யாபீடம் என்னும்

குருகுல முறையில் இயங்கும் கல்விக்கூடம் 1998ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

தற்போது இக்கல்விக் கூடத்தில் பயின்ற மாணவ மாணவியர்க்கு மேற்கொண்டு பயில பகவான் ஸ்ரீ நேமிநாத துவக்க மற்றும் உயர்நிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது.

இங்கு பயிலும் மாணவர்களின் திறமைக்கேற்ப அவர்களை மேற்படிப்பிற்காக, பட்டபடிப்பு, முதுகலை படிப்பு, ஆசிரியர் பயிற்சி, செவிலியர் பயிற்சி, தொழிற்பயிற்சி மற்றும் ஐ.ஏ.எஸ். பயிற்சி வரையிலும் அனுப்பப்பட்டு வருகின்றனர். மேலும் சில மாணவர்கள் தமிழகத்திற்கு அப்பால் உத்திர பிரதேசத்தில் இருவரும், டெல்லியில் இருவரும் மற்றும் இராஜஸ்தானில் 16 மாணவர்களும் அனுப்பப்பட்டுள்ளனர்.

இம்மாணவர்கள் அனைவருக்கும் இலவசமாக உணவு, உடை, இருப்பிட வசதி, புத்தகம், கல்விக் கட்டணம் போன்றன அளித்து அனைத்து செலவுகளையும் மடத்தின் மூலமாகவே வழங்குகின்றனர். இது போன்ற சேவைகளில் ஈடுபடுத்திக் கொள்ள நல்அறச் சான்றோர்களாகிய அனைவரையும் இந்த ஜினமடம் வரவேற்கிறது.

இந்த மடத்தின் மூலமாக தற்போது முதியோர்களுக்கு உதவி செய்தல் மற்றும் ஏழைகளுக்கு உதவியும் பல்வேறு வழிகாட்டல் பணிகளும் நடைபெற்று வருகின்றன. மேலும் இயலாதோர்களுக்கும் நோயாளிகளுக்கும் இலவச மருத்துவ உதவிகள் போன்ற பல திட்டங்கள்

செயல்பட்டுவருகிறது. இப்பணிகள் மேலும் தொடர கருணையுடன் உதவ உங்களை இந்த ஜினமடம் கேட்டுக் கொள்கிறது.

இப்புனித சேவையில் பங்கு கொண்டு நீங்கள் வழங்கும் பண உதவியையும், பொருள் உதவியையும் திருமலை ஜினமடம் அன்புடன் ஏற்றுக் கொள்ளும்.

உங்களது நன்கொடையை நேரிலோ அல்லது வரைவோலை அல்லது செக் மூலமாகவோ கீழ்கண்ட ஏதேனும் ஒரு பெயரில் வழங்கலாம்.

*** Shree Dhavalakeerthi Swamji.**

*** Shree Kshetra Arahantha Giri Digambara Jain Math.**

*** Shree Kshetra Arahantha Giri Digambara Jain Management Trust.**

*** Acharya Shree Akalanka Education Trust (80 G).**

*** Acharya Shree Akalanka Vidhyabeetam (80 G).**

**Through :**

**Indian Bank, Vadamathimangalam - V041**

**State Bank of India, Polur (ADB) - 5356**

முகவரி :
ஸ்ரீ க்ஷேத்திர அரஹந்தகிரி திகம்பர ஜைனமடம்,
திருமலை (போளூர் வட்டம்).
திருவண்ணாமலை மாவட்டம் – 606 907.
போன் : 04181 – 244325

# தருமதேவி வரலாறு

(கூஷ்மாண்டினி)

திருமலைக்கு தெற்கே அக்காலத்தில் ஸ்ரீ புரம் என்ற ஊர் இருந்தது. அவ்வூரில் சோமசர்மா என்ற பிராமணனும் அவரது மனைவியான அக்னிலா என்ற ஜைன மதத்தைச் சேர்ந்த பெண்ணும் இல்லறம் நடத்தி வந்தனர்.

அச்சமயம் திருமலையில் தவம்செய்யும் முனிவர் கூட்ட தலைவரான வரதத்தாசாரியார் (வாரம் ஒரு நாள்) ஆகாரம் நாடிச் சென்றார். முனிவரைக் கண்ட அக்னிலா தானும் ஒரு ஜைனர் குடி பிறந்தவளே என்றும் தமது வீட்டில் முனிவரை ஆகாரம் பெற்றுக் கொள்ளும்படியும் வேண்டினாள்.

முனிவரும் ஒப்புக் கொண்டு தமது கரபாத்திரத்தால் ஆகாரம் பெற்று உண்டு, உபதேசம் வழங்கி இல்லத்திலிருந்து நீங்கும் வேளையில் எதிரே சோம சர்மாவும் சில பிராமணர்களும் உள்ளே நுழைந்தனர். ஜைனமுனி உண்டவீடு களங்கப்பட்டுவிட்டதாக மற்றவர்கள் கூச்சலிட சோமசர்மா சினம் கொண்டு மனைவியை அடித்து துன்புறுத்திட, அக்னிலா மயங்கி விழுந்தாள்.

மூர்ச்சை தெளிந்து எழுந்த அக்னிலா, தன் சிறு வயது மகன்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு, வரதத்தாசாரியார் தவமிருக்கும் திருமலையை நோக்கி நடந்தாள். கரடுமுரடான பாதையையும், கடும்வெயிலையும்

பொருட்படுத்தாது சென்று முனிவரை வணங்கி தீட்சை கோரினாள். முனிவரோ தற்போது வேண்டாமெனக் கூறி அறிவுரை வழங்கினார். ஆனாலும் அக்னிலா தன் குழந்தைகளுடன் மலையிலேயே தங்கி இரவைக் கழித்தாள்.

அக்னிலா அறிவுரை பெற்ற அதே வேளையில் ஸ்ரீ புரத்தில் பிராமணர்கள் வசித்த வீதி முழுவதும் எரியத் தொடங்கியது. ஜைனமுனி ஆகாரம் பெற்ற சோமசர்மன் வீடு மட்டும் எரியவில்லை. எனவே முனிவரின் பெருமை சோமசர்மன் உணர்ந்தார். தாம் தவறு செய்துவிட்டதை எண்ணி வருந்தி அக்னிலாவைத் தேடி அலைந்தார்.

அக்னிலா திருமலைக்குச் சென்றதை அறிந்த சோம சர்மா மலைப் பகுதிக்குள் வருவதை கண்டு, கணவன் தன்னைக் கொல்லவே வருவதாக எண்ணி பயந்தாள். குழந்தைகளை விட்டு நீங்கி மலையின் தென்கிழக்கில் (எண். 23) உள்ள சுனையில் குதித்து உயிர் துறந்தாள்.

மரித்த இரண்டே நாழியில் பிரகாசமுடன் தரும தேவியாக எழுந்தாள். ஸ்ரீ நேமிநாதரின் இயக்கியாக பிறவி கொண்டாள். இறுதியில் தம்மை தேடிவந்த சோமசர்மாவிடம் தான் அக்னிலா இல்லை என்பதை விளக்கி, வரதத்த முனிவரை வணங்கி விடைபெற்று வியந்தர லோகத்தை அடைந்து ஸ்ரீ நேமிநாத சுவாமியின் பாத சேவையில் மிகவும் பக்தியுடன் தம்மை ஈடுபடுத்திக் கொண்டாள்.

# பஞ்சகுல தேவதைகள் ஆலயம்

திருமலை ஜைனமடத்தின் முன்பக்கமாக, சுவாமிஜி அவர்களின் பெருமுயற்சியால் 12.02.2006 அன்று பஞ்சல குல தேவதை ஆலயம் (எண். 2) பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதுபோன்ற ஆலயம் இந்தியாவில் வேறெங்கும் காணமுடியாது என்பதுதான் இதன் சிறப்பு.

மிகப் பெரிய கற்சிலைகளால் அமைந்த இந்த ஆலயம் அழகும், சிறப்பும் உடையது. இந்த ஆலயத்தில், கிழக்கு – தெற்கு – மேற்கு – வடக்காக சுற்றிவரும்போது வரிசையாக கீழ்காணும் தேவதைகளை வலம் வந்து வணங்கலாம்.

1. ஸ்ரீ வராகி – அஷ்டமாத்ரிகா என்னும் எட்டு தாய்தெய்வங்களுள் ஒருவர் (வாகனம் – சிம்மம்)
2. ஸ்ரீ கூஷ்மாண்டி (அம்பிகா) – ஸ்ரீ நேமிநாதரின் இயக்கி (வாகனம் – சிம்மம்)
3. ஸ்ரீ ஜ்வாலாமாலினி – ஸ்ரீ சந்திரபிரபரின் இயக்கி (வாகனம் – காட்டெருமை)
4. ஸ்ரீ சக்கரேஸ்வரி – ஸ்ரீ ரிஷபநாதரின் இயக்கி (வாகனம் – கழுகு)
5. ஸ்ரீ பத்மாவதி – ஸ்ரீ பார்சுவநாதரின் இயக்கி (வாகனம் – குக்குடசர்பம்)


ஆகிய ஐந்து தேவதைகளின் ஆலயத்தை தரிசிக்க அனைவரும் வருக.


திருமலையில் உள்ள பழைமையான ஜினாலயங்களை தரிசித்து அருள் பெருக.

ஸ்ரீ சிகாமணி நாதர் பாதம்



ஸ்ரீ மகாவீரர் ஆலய கோபுரம்







குகைக் கோயில் வெளித் தோற்றம்

**பேருந்து வழி :**

சென்னை – ஆரணி திருமலை
திருப்பதி – வேலூர் – ஆரணி – திருமலை.
பெங்களூர் – வேலூர், ஆரணி – திருமலை.
பெங்களூர் – திருவண்ணாமலை – போளூர் – திருமலை.

**திருமலைக்கு வரும் பேருந்துகள் :**

போளூரிலிருந்து – ராஜா, அம்மன் மினி பஸ்,
ஆரணியிலிருந்து A.A.A. பஸ்,
10 a.m., 4 p.m., 9 p.m. க்கு புறப்படும். அல்லது
ஆரணி to போளூர் சாலையில்,
வடமாதிமங்கலம் நிறுத்தத்தில் இறங்கி வரலாம்.



உலோகப் படிமங்கள்



இராஜராஜ சோழன் சிற்பம்

KCM பிரிண்டர்ஸ், ஆரணி. Ph : 237336